# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு /கமலநாதன் அவர்களின் உரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளில் எமது மண்ணுக்குக் கல்விச்சேவையும், தொண்டும் ஆற்றிய மூதறிஞர்கள் ஞாபகார்த்தமான நினைவுப் பேருரைகளில் இன்றைய நிகழ்வாக பேரறிஞர் கலாநிதி சொக்கன் (கந்தசாமிச் செட்டியார் சொக்கலிங்கம்) நினைவான நினைவுப் பேருரை ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது.

பேரறிஞர் சொக்கன் அவர்கள் 1930 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி ஆவரங்கால் கிராமத்திலே பிறந்தார். சிறுவயதிலிருந்தே ஆக்கத்திறன்களில் ஆர்வமான சொக்கன் மாணவனாக இருந்ததிலிருந்து இறக்கும் வரை தனது கற்றலை நிறுத்தவில்லை. வித்துவான், கலைமாணி, முதுகலைமாணி, கலாநிதி என அவர் தன் கல்விப் புலமையை விரித்துக் கொண்டார். எனது கிராமமான நாயன்மார்கட்டு கிராமத்திலே திருமண வாழ்வை மேற்கொண்ட சொக்கன் அவர்களிடம் கற்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. எனது ஞானகுருவாக கல்வி வழிகாட்டிய பெருமகன் சொக்கன் அவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, நாவலர் பாடசாலை, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை, பலாலி ஆசிரிய கலாசாலை, பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகம் சொக்கன் அவர்களை உயர்ந்த கல்வியியல் பேரறிஞராக்கின. ஆசிரியராக (1952-1973), அதிபராக (1973-1982), இலங்கை கல்வி நிர்வாக சேவையாளராக, கொத்தணி அதிபராக (1982-1990) விளங்கியதுடன் அரசாங்கப் பாடநூல் உறுப்பினராகக் கடமையாற்றி தமிழ், சைவநெறி ஆகிய பாடநூல் எழுத்தாக்கத்திலும் ஈடுபட்டார்.

தமிழையும், சைவத்தையும் வளர்க்க அரும்பாடு பட்டார். பல பொதுமன்றங்களையும் அமைப்புக்களையும் ஏற்படுத்தித்

**ஈழத்தமிழின் ஆழம்தந்து**
**வாழும் சொ(ர்)க்கம்!**

ஈழத் தமிழின் இதயம் நிலைத்த
இமயம் ஒன்று இமைகள் மூடியது!
தமிழர் நெஞ்சில் கமழும் தங்கச்
சிந்தனைச் சிகரம் வந்தனம் சொன்னது!

சாதித்த படைப்பினால் சாஹித்திய மண்டலங்கள்
சந்தித்த ‘சுந்தரே’
நூற்றுக்கணக்கில் நூல்களை நாட்டிய
நாற்றுப் பயிரே....
நேற்றுவரை உன்னை நெஞ்சிருத்தினோம்;
நேராது உனக்கேதுமன்று.
கூற்றுவன் கூட குறிபார்த்திருந்தான்.
வேற்றிடத்தில் உனக்கு வேட்டுவைக்க....

மூத்த சொத்தே மூதறிவே உந்தன்
முழக்கம் என்றும் முடக்கம் கொள்ளாது!
ஈழ மண்ணில் இலக்கியத் தளத்தில்
ஆழ இருந்த அற்புத சொ(ர்)க்கமே!
நாளது ஆயினும் வீழாது உந்தன்
விதைப்புகள் விளையும்!
இருப்பினும்,
சொக்கையா ஒரு துக்கமையா!
கன்னியர் சைக்கிளில்
மின்னிடும் வெள்ளாடை மிடுக்குடன்
பவனி வரும்உன்
புலமை வலத்தின் புதுமைப் பொலிவை
எண்ணிறைந்து கண்டுஇனி
தன்னிறைவ தெப்போது?
நின்நிறைவை எண்ணி
கண்ணிறை கின்றதெப்போது....!

ம[illegible]யூர் ரட்ணேஸ்
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி